# நாட்டை வீங்க வைக்கும் பணவீக்கம்

2008 தொடக்கத்திலிருந்து பணவீக்கம், பணவீக்கம் எனச் செய்திகள் நித்தமும் வந்த வண்ணமாக உள்ளன. அப்படி என்றால் என்ன? பணவீக்கம் என்பது பொருள்கள் வாங்கும் சக்தி குறைவாக இருக்கும் நிலையில் ஏற்படுகிறது. பொருள்களின் விலை பன்மடங்கு அதிகரித்து வாங்கும் சக்தி குறைந்து, உற்பத்தி குறைவாகவும், தேவை அதிகமாகவும் இருக்கும் நிலையில் பணவீக்கம் ஏற்படுகிறது.

மக்களிடம் பணம், ஊதியம் குறைந்து வருகிறது. இன்றைக்கு கிடுகிடுவென ஏறி பணவீக்கம் 11.05%க்கு எட்டிவிட்டது. மத்திய அரசு இதையெல்லாம் கண்டுக்கொள்ளாமல் ஆழ்ந்த தூக்கத்தில் இருக்கிறது. மன்மோகன் சிங், சிதம்பரம், அலுவாலியா கோஷ்டிகள் இதைத் தடுக்க மும்முரம் காட்டவில்லை.  காங்கிரஸ் கட்சியோ இதை மிகவும் துரதிர்ஷ்டவசமானது என்று உதட்டளவில் சொல்கிறதே தவிர, ஆக்கப்பூர்வ நடவடிக்கையில் ஈடுபட்டதாகத் தெரியவில்லை. சாதாரண, எளிய, நடுத்தர மக்களை வாட்டி வதைக்கும் வட்டி சதவிகிதமும் பல மடங்கு அதிகரிக்கும். சிதம்பரம், பணவீக்கத்தைக் குறைத்து விடுவேன் என்று சொல்லிய வார்த்தைகள் யாவும் பொய்யாகி விட்டன.

விலைவாசி ஏறி பணவீக்கம் ரிசர்வ் வங்கியின் அளவுகோலில் 5 சதவீதத்திலிருந்து மீறி திடீரென 7.41 சதவிகித அளவுக்கு ஏறி, 2007 டிசம்பரில் 3.5 கடந்த மார்ச்சில் 7% ஆகியது. உணவுப் பொருள்கள், கட்டுமானப் பொருள்கள் விலை என அனைத்து விலைகளும் ஏறிவிட்டன. காய்கறிகள்களின் விலை 3%, பருப்பு வகைகள் 1.2%, கோதுமை, மீன் 1%, சர்க்கரை 2%, கடலை எண்ணெய் மற்றும் நாட்டுச் சர்க்கரை 1%. நறுமணப் பொருள்களின் விலை 2%, இரும்பு உருக்கின் விலை 5.6%. இதேபோன்று மற்ற கலப்பு  உலோகங்களின் விலைகளும் கூடியது. வேளாண் பொருள்களின் விலை 73% உயர்ந்துள்ளதாக உலக வங்கி கணக்கு கூறினாலும் விவசாயிக்கு உரிய நியாயவிலை கிடைக்கவில்லை என்பதுதான் யதார்த்தம். இந்தப் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த வங்கியின் வைப்புத் தொகை 0.5% அளவுக்கு உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இதனால் பொருளாதாரத்தின் வளர்ச்சி மற்றும் சீர்திருத்தங்கள் பெரிதும் பாதிக்கப்படலாம்.

இன்றைய இந்தியாவின் மொத்த வெளிநாட்டுக் கடன் ரூ.8 இலட்சம் கோடி ஆகும். இந்திய மக்கள் தொகை 110 கோடி என்றால் ஒவ்வொரு இந்தியனின் தலையிலும் கட்டப்படும் கடன் தொகை ரூ.2,218/- ஆகும். டாலருக்கு நிகராக ரூபாய் மதிப்பு கூடவில்லை. இதனால் மேலும் 6 பில்லியன் டாலர் கடன் சமீபத்தில் உயர்ந்துவிட்டது.

கடந்த சில ஆண்டுகளாக நமது பொருளாதார நிலைமை சரியில்லை. 4,780 கிராமப்புற வங்கிகள் மூடப்பட்டன. ஆனால், நிதியமைச்சர் ப.சிதம்பரத்தின் சிவகங்கைத் தொகுதியில் 40 வங்கிக் கிளைகள் பண இருப்புக்கு வழி இல்லாமல் துவக்கப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. இது ஆரோக்கியமான செயலா? வெறும் விளம்பரமா? இது சிவகங்கை மக்களுக்கு எந்த அளவுக்கு உதவியாக இருக்கும் என்பது கேள்விக்குறியே. அமைச்சர் இதைச் செய்வது சாதனை என்று கருதலாம். ஆனால் அதனால் என்ன பயன்பாடு? நிதியமைச்சர் பங்கு வர்த்தகத்தில் காட்டும் ஆர்வத்தை மற்ற முக்கிய நிதிப் பிரச்னைகளில் காட்டுவது இல்லை. பட்டினியால் வாடும் 118

நாடுகளின் பட்டியலில் 94 - ஆம் இடத்தில் இந்தியா உள்ளது. வர்த்தக அமைச்சர் கமல்நாத் இதைக் கட்டுப்படுத்தி விடலாம் என சாதாரணமாகக் கூறியுள்ளார்.

நமது நாட்டில் 70% பேரின் ஒருநாள் வருமானம் ரூ.20/- மட்டுமே. மாதம் ரூ.356/. சம்பாதித்தால்தான் வறுமைக் கோட்டுக்கு மேல் உள்ளவர்களாகக் கணக்கிடப்படுகிறது. இதில் நாள் ஒன்றுக்கு இரண்டு வேளை சாப்பிட முடியாது. விலைவாசி உயர்வுக்கு ஆன் லைன் வர்த்தக முறையும் ஒரு காரணம். பொது விநியோகம் சீராக - முறையாக நடப்பதும் இல்லை. இதனால் வறுமையில் வாடும் மக்கள் பெரிதும் அவதிப்படுகின்றனர். பணம் என்பது ஒரு அளவுகோல்தான் என்பதே தவிர, அதற்கென்று வேறுவிதமான மதிப்புகள் கிடையாது. அதைக் கொடுத்துப் பொருள்களைப் பெற முடியும். அப்படிப் பொருள்களைப் பெறும்போது பணத்தின் மதிப்பு விலை குறைந்து, பொருள்களின் விலை அதிகமாக இருந்தால் பணவீக்கம் ஏற்படுகிறது. எதிலும் சமமாக விற்பதிலும் கொடுப்பதிலும் உற்பத்தியிலும் இருந்தால் பொருளாதாரம் நிலையாக - ஸ்திரமாக இருக்கும்.

பண்டைக் காலத்தில் பணம், நாணயம் முறையில் இல்லை. உணவுப் பொருள்களைப் பச்சையாக உண்ணாமல், நெருப்பில் சுட்டு உண்ண ஆரம்பித்து அதன் மூலம் பரிணாமங்களும் மாற்றங்களும் ஏற்பட்டபொழுது, மனித சக்திக்கு சில தேவைகள் ஏற்பட்டன. அந்தத் தேவைகளைப் பெறுவது எப்படி என்று முயன்றபோது பண்டமாற்று முறை வந்தது. தன்னிடம் உள்ள பொருளைக் கொடுத்து தனக்குத் தேவையான பொருள்களைப் பெறுவது பண்டமாற்று முறை. அச்சமயத்தில் தன்னிடம் உள்ள ஆடு, மாடுகள், உணவு தானியங்களைக் கொடுத்து தேவையான பொருள்களைப் பண்டமாற்று முறையில் மக்கள் பெற்றனர்.

அதன் பின், பல்வேறு நடைமுறைப் பிரச்னைகள் ஏற்பட்டபோது தங்கள் வசம் உள்ள தங்கம், வெள்ளி, இரும்பு, தாமிரம் போன்ற உலோகங்களைக் கொடுத்துப் பொருகளைப் பெற்றனர். இதுவே ஒரு காலத்தில் பணமாகக் கருதப்பட்டது. அதைப் பின்பு நாணயங்களாக வடித்தனர். அதில் மன்னர்களுடைய முத்திரைகள் பொறிக்கப்பட்டு உலோகத்தாலான காசுகள் புழக்கத்திற்கு வந்தன. ஓடும் அல்லது பறக்கும் பணம் என்ற இன்றைய காகிதப் பணம் முதன்முதலாக சீனாவில் நடைமுறைக்கு வந்தது. இந்தியாவில் 1761 - இல் இதற்கான சட்டங்களைக் கொண்டு வந்து காகிதப் பணம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஒரு ரூபாய் நோட்டை மட்டும் இந்திய அரசாங்கம் அச்சிட்டது. இப்பொழுது அந்த ஒரு ரூபாய் காகிதப் பணம் நடைமுறையில் இல்லை. அதற்கு மேலான தொகை மதிப்புள்ள அனைத்து ரூபாய் நோட்டுகளை இந்திய ரிசர்வ் வங்கி அச்சிட்டு வெளியிடுகின்றது.

நாணயங்கள் அச்சிடும் இடத்தை 'மின்ட்' என்பார்கள். சென்னையில் தங்கசாலை என்ற பகுதியில் இப்பணி நடந்தது என வரலாறு கூறுகின்றது. தற்பொழுது மும்பை, நொய்டா, கொல்கத்தா, ஐதாராபாத் போன்ற இடங்களில் பணம் உருவாக்கும் அச்சகங்கள் உள்ளன. எந்த வினைக்கும் எதிர் வினை ஒன்று இருக்கும். இரண்டு சக்திகள் ஒந்றோடு ஒன்று இணைந்து சென்றால்தான் ஆக்கமான ஒரு சக்தி ஏற்படும். அதுபோன்றுதான் நோட்டுகள் அதிகமாக அச்சடித்து பொருள்களின் விலை கட்டுக்குள் இல்லை என்றால், பணவீக்கம் ஏற்படுகிறது. உற்பத்தியை அதிகரிக்காமல் வெறும் காகிதப் பணத்தை மட்டும் அச்சடித்து புழக்கத்தில் விட்டால் பணவீக்கம் ஏற்பட்டு பெரும் சீரழிவுக்கு வழியாகிவிடும்.

விலைப் பட்டியலைப் பொறுத்து பணவீக்கம் ஏற்படுகிறது. இதை அறிய   அதாவது க என்பது பொருள்களின் விலை அளவு, ஈஇ என்பது நுகரும் பொருள்களின் தேவை அளவு, குஇ  என்பது நுகர் பொருள்களின் உற்பத்தி அளவு. பணவீக்கம் குறித்து விவாதிக்க மற்றும் அறிய பல கோட்பாடுகள் உள்ளன. அவற்றில் சில பொதுவான கோட்பாடு, ஆஸ்திரியா கோட்பாடு, மார்க்சீய கோட்பாடு மற்றும்உற்பத்தி எனப் பல கோட்பாடுகள் ஆகும்.

நம் நாட்டில் மொத்த விலைக் குறியீடு (Wholesale Price Index – WPI) மற்றும் நுகர்வோர் விலைக் குறியீடு (Consumer Price Index – CPI) என இரு விலைவாசிக் குறியீடுகள் உள்ளன. மொத்த வியாபாரிகள் கொடுக்க வேண்டிய விலையே WPI நுகர்வோர் கொடுக்க வேண்டிய விலையே CPI. நுகர்வோர் விலைக் குறியீடுகளின் அடிப்படையிலேயே ஆலைத் தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள், உடல் உழைப்பு அல்லாத நகர்ப்புற தொழிலாளர்கள் ஆகியோருக்கான தனித்தனி கணக்கீட்டு முறைகள் உள்ளன.

உதாரணமாக,

மார்ச் 29, 2008 - 226 புள்ளிகள்

மார்ச் 31, 2007 - 210.4 புள்ளிகள்

பணவீக்க விகிதம் 226 + 210.4 x 100 = 7.41 சதவீதம்

210.4 எனினும் விலைக் குறியீட்டின் அடிப்படையிலேயே நமது நாட்டில் பணவீக்கம் அளவிடப்பட்டு, பணவீக்கக் குறியீடாக ஒவ்வொரு வாரமும் வெளியிடப்படுகிறது. ஒவ்வொரு குறியீட்டிற்கும் விலைக் கணக்கீட்டிற்கான சரக்குக் கடைகள் மாறுகின்றன. மொத்த விலைக் குறியீட்டெண்ணுக்கான கூடையில் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கறுக்கு 22.02 சதவீதம். எரிபொருளுக்கு 14.23 சதவிகிதம், உற்பத்திப் பொருள்களுக்கு 63.75 சதவீதம் என்ற விகிதத்தில் பொருள்கள் இடம் பெற்றுள்ளன.

விலைவாசி உயரும்போது உணவுப் பொருள்களின் விலைதான் முதலில் வேகமாக உயர்கிறது. பணவீக்கத்தை மதிப்பிடும்போது உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் அளவு மிகக் குறைவாக 22.02 சதவீதமாகத் தான் எடுத்துக் கொள்ளப்படுகிற நிலை உள்ளது. விலைவாசி உயர்வு நாட்டின் சாமானிய மக்களின் அன்றாட வாழ்க்கையைக் கேள்விக்குறியாக்கி உள்ளது. மத்திய அரசின் அர்ஜுன் குப்தா கமிட்டியின்படி, நாட்டின் 77 சதவீதத்தினர் ஒரு நாளைக்கு ரூ.20 - க்கும் குறைவாகவே செலவழிக்க முடிகிறது. ஏறிவரும் விலைவாசி உயர்வு இவர்களின் வாழ்க்கையில் கடும் பாதிப்பினை ஏற்படுத்தும்.

விலையை நிர்வகிக்கும் அரசின் அமைப்பு 18 மையங்களில் சேகரித்தத் தகவலின் அடிப்படையில் மொத்த விற்பனை விலையையும் சில்லறை விற்பனை விலையையும் வெளியிட்டுள்ளது. நுகர்வோர் கொடுக்கும் விலையை நோக்குகையில் பணவீக்கம் தற்போதுள்ள விகிதத்தைவிட மூன்று மடங்கிற்கும் மேலாக இருக்கும். இத்தகைய உயர்வு திடீரென்று வந்த நெருக்கடி அல்ல. இவற்றை கட்டுப்படுத்த அவ்வப்போது அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்.

அச்சகத்தில் விருப்பத்திற்கு ஏற்றவாறு அச்சடிக்கலாம். அதற்கு இணையாக உற்பத்தியும் வளமும் இருக்க வேண்டும். அப்படி இல்லையெனில் பொருளாதாரமே கெட்டுவிடும். அதைச் சரிசெய்ய முடியாது. பணவீக்கம்  ஒரு தராசில் உயர்ந்து கொண்டே சென்றால் துவக்கத்தில்

சிறிதாக இருந்து ஓடி பின்பு தாவி அது நாட்டையே அழித்துவிடும். பணவீக்கம் ஏற்பட்ட உடனே அதை அழித்துவிட வேண்டும். தீ விபத்து ஏற்படும்போது துவக்கத்திலேயே அழிக்காவிட்டால் அது பெரிதாகி நம்மையே அழித்துவிடும். அதே போன்றுதான் பணவீக்கமும்.

உற்பத்தி இல்லாதபோதோ, நிலையான ஆட்சி இல்லாதபோதோ பணவீக்கம் அண்டி விடுகிறது. வரலாற்றைப் பார்த்தால் இம்மாதிரி பணவீக்கங்கள் நாடுகளை அழித்துள்ளன. முதல் உலகப் போருக்கு முன்பு ஜெர்மனியில் அதன் பணமான மார்க் அதிக மதிப்போடு சர்வதேச சந்தையில் அங்கீகரிக்கப்பட்டது. அமெரிக்க டாலர்கள் கூட அந்த அளவுக்கு இல்லை. முதலாம் உலகப் போருக்குப் பின் ஜெர்மனி பணத்தின் மதிப்பு வீழ்ந்தது. அதற்கு ஜெர்மானிய அரசு உற்பத்திக்கு நிகராகப் பணத்தை அச்சடிக்காமல் விரும்பியவாறு அச்சிட்டு, தாராளமாகப் புழக்கத்தில் விட்டதுதான் இதற்கு காரணம். அங்கு விலைவாசிகள் ஏறின. சந்தைக்குப் போகும் ஒருவர் சாக்குகளில் பணத்தைக் கட்டிக்கொண்டு செல்ல வேண்டும். அதற்கு நிகராகப் பொருளை வாங்கிக் கொண்டு வரும்போது சட்டைப் பையில் போடுகின்ற அளவில்தான் வாங்கும் சக்தி இருந்தது. இதுகுறித்து பல வேடிக்கையான அடைமொழிகளும், பழமொழிகளும் உள்ளன.

ஜெர்மனியில் விலைவாசியை எதிர்த்து அனைத்துத் தரப்பினரும் போராடினர். அதைச் சமாளிக்க அரசு மீண்டும் மீண்டும் பணத்தை அச்சடிக்கும் தவறைச் செய்தது. இதனால் ஒரு சிறிய பொருள் கூட வாங்க வேண்டுமெனில் இலட்ச ரூபாய்க்கு செலவு செய்ய வேண்டியிருந்தது. ஒரு பற்பசை வாங்க வேண்டும் என்றால் இலட்ச ரூபாய்க்கு மேல் செலவு செய்ய வேண்டியிருந்தது. இங்கு புழக்கத்தில் இருந்த நோட்டுகளைக் கொண்டு சமையல் செய்தார்கள் என்ற செய்திகளும் உள்ளன. ஒரு ரொட்டிக்கு 50 ஆயிரம் மில்லியன் மார்க்குகள் செலவு செய்ய வேண்டும். இப்படிக் கடுமையாக பணத்திற்கு மதிப்பில்லாமல் ஜெர்மனி அல்லாடியது. அன்றாடத் தேவையான பொருள்களின் விலை இலட்சம் ரூபாய்க்கு மேல் இருந்தது.

யூகோஸ்லேவியாவிலும் தினார் மதிப்பு இதே நிலையில் இருந்தது. அங்கு பணத்தை வரையறை இல்லாமல் அச்சடித்து புழக்கத்தில் விட்டதனால் விலைவாசி ஆயிரம் மடங்கு ஏறியது. இதனால் கட்டுப்படுத்த முடியாமல் பழைய காகித நோட்டுகளைச் செல்லாது என உத்தரவிட்டு புதிய பணத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்தது. இலத்தீன் - அமெரிக்க நாடுகளில் இம்மாதிரி நிகழ்வுகள் உண்டு. பிரேசில், மெக்சிகோ, அர்ஜெண்டினா போன்ற பல நாடுகளில் இந்தப் பணவீக்கத்தின் பயங்கரத்தால் சொல்ல முடியாத சோதனைகள் பல நிகழ்ந்துள்ளன.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னும் பல சேதாரங்கள் பணவீக்கத்தால் ஏற்பட்டன. பணவீக்கத்தால் நிலையான வருவாய் பெறுபவர்கள், மாத வருமானம், கடன் கொடுத்தோர் என அனைத்துத் தரப்பினரும் பாதிக்கப்படுகின்றனர். வங்கி பரிவர்த்தனையில் அத்தனையும் பாழாகிவிடும். வெள்ளம், சுனாமி, வறட்சி, இயற்கைச் சீற்றங்கள் போன்று பணவீக்கம் ஒரு சீர்கேடு ஆகும். இதனால் வாழ்க்கையின் அடித்தளத்தில் உள்ள மக்களும், நடுத்தர மக்களும் பாதிக்கப்படுவர். ஏழை - பணக்காரர்கள் இடையே உள்ள தூரம் அதிகரிக்கும். பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த விவசாய உற்பத்தி, தொழில் உற்பத்தி, நாட்டில் கிடைக்கும் உலோகச் செல்வங்கள் இருந்தால் மட்டுமே பணவீக்கத்தைத் தடுக்கலாம். வளர்ச்சிப் பாதையைக் கொண்டே இக்கொடிய தீயை அணைக்க முடியும். பணவீக்கம் என்பது ஒரு பகல் கொள்ளைக்காரன் கொள்ளையடிப்பதை விட, பார்வைக்குத் தெரியாமல் நம்மிடமிருந்து பணம் பறிபோவதுதான். இந்தக் கொள்ளையைக் குறித்து எங்கு சென்றாலும் நீதி பெற முடியாது.

இன்றைக்கு இந்தியா டிரில்லியன் டாலர் மதிப்புள்ள பொருளாதாரத்தை கொண்ட நாடாக இருந்தாலும் இப்போது ஏறியுள்ள இந்தப் பணவீக்கத்தை எப்படி கட்டுப்படுத்த போகிறது என்று தெரியவில்லை. இந்தியாவின் பணவீக்கம் 1980 - களில் 8 விழுக்காடாகி, 90களில் ஏறத்தாழ 17.5 விழுக்காடு வரை கூடுதலாகி விட்டது. புதிய பொருளாதாரக் கொள்கைகள் பன்னாட்டு நிறுவனங்களின் படையெடுப்பு ஓரளவு கிடைத்தாலும் எதிர்கால வளர்ச்சியையும், இதில் கிடைக்கின்ற லாபங்களையும் வெளிநாட்டு நிறுவனங்களே எடுத்துச் சென்றுவிடும். இன்றைக்கு ஒரு சின்னத் தீர்வாக இருந்தாலும், இந்தத் தீர்வு எதிர்காலத்தில் நம்மைக் காலனி ஆதிக்கத்திற்கு உட்படுத்தி விடும். எனவே, பணவீக்கத்தை நமக்கு நாமே கட்டுப்படுத்துகின்ற அளவில் பொருளாதார மாற்றங்களையும், நடவடிக்கைகளையும், திட்டங்களையும் தீட்ட வேண்டும். தற்போது நாம் 11 - ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தை எட்டியுள்ளோம்.

பணவீக்கத்தை நாம் எடுத்து வைக்கும் முடிவினால் வெல்ல வேண்டும். சீனாவிலேயே பலமுறை பணவீக்கம் ஏற்பட்டு இன்றைக்கு அங்கு பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்தக் கூடிய நிலையில் தீர்வுகளும், முறைகளும் கையாளப்படுகின்றன. அதுபோன்று நம் நாட்டில் ஐந்தாண்டுத் திட்டம், ரோலிங் பிளான் என்று பல நிலைப்பாடுகள் எடுத்தும் கிராமப்புறங்களின் வளர்ச்சி முழுமையாக்கப்படவில்லை. மத்திய - மாநில அரசுகள் நிதிநிலை அறிக்கைகள் தயாரிக்கும் நிலையில் இருக்கின்றன. நகரத்தில் வாழ்பவர்களுக்கும் கிராமத்தில் வாழ்பவர்களுக்கும் உள்ள இடைவெளி மாறவில்லை.

நமது மண் வாசனைக்கு ஏற்றவாறு பொருளாதாரச் சீர்திருத்தங்களும், நிதிநிலை அறிக்கைகளும் இருக்க வேண்டும். உலக வங்கிக்குக் கட்டுப்பட்டு தான்தோன்றித்தனமாக நம்மை நாமே ஏமாற்றிக் கொண்டு அதிகார வர்க்கத்தில் இருப்பவர்கள் செய்தால் நாட்டைப் பணவீக்கம் என்ற கொடிய நோய் தாக்கி புரையோடிய நிலைக்குத் தள்ளிவிடுமோ என்ற ஐயம் ஏற்படுகிறது. அறுபது ஆண்டுகளுக்கு முன் நாம் விடுதலை பெற்ற நமது இறையாண்மை மீண்டும் அந்நிய சக்திகளின் கைகளுக்கு மாறிவிடுமோ என்ற அச்சத்தின் அபாய ஒலி ஒரு பக்கம் கேட்டுக் கொண்டே இருக்கின்றது.

**சங்கொலி** 04.07.2008